முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**முக்காலமும் உணர்ந்த முனிவனும் பொருளாதார மேதையுமான முருகப்பெருமான் அருளியது எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி பங்குனி மாதம் 10ம் திகதி முதல் பங்குனி மாதம் 17ம் திகதி வரை மார்ச் 24ம் திகதி முதல் மார்ச் 31ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

**1.** **பண்பாடு கொண்ட பாரதமே**
**பயபக்தி நிறைந்த தமிழகமே**
**சண்முகனார் என் சக்தி நிறைந்த**
**சர்வபலமிக்க பரதம் தமிழகத்தில்**

**2.** **தமிழகத்தில் விளம்பி சேல் திங்கள்**
**தசதிகதி மேல் மூவையீர் திகதி வரை**
**(விளம்பி வருடம் பங்குனி மாதம் 10ம் நாள் 24.03.2019, ஞாயிறு முதல் பங்குனி மாதம் 17ம் நாள் 31.03.2019, ஞாயிறு முடிய)**
**நேமமுள நிகழ்வாக எதிர்கால பலன்குறித்த**
**நிலமதனில் வார ஆசி பலன் தன்னை**

**3.** **தன்னிலே சுப்பிரமணியர் யானும் அருள்வேன்**
**தரணி கலி இடர் பிடியிலிருக்க**
**இன்னலென சமூக அவலங்களும்**
**இளமையை தகாத வழி கிடத்தி**

**4.** **கிடத்தி பண்பில்லா செயல் அநீதி**
**குறைபடா சக்தி எனும் மாதர்கட்கு**
**இடர்பட பாதுகாப்பு என்பதில்லா**
**இன்னலும் அச்சமும் மிகுதி காண்கும்**

**5.** **காண்குமிந்த அநீதிகளை அழிக்கும்**
**கட்டுப்படுத்தும் பதவி ஆளுமைகள்**
**உண்மைபட செயல்பட்டு காத்திடா**
**உறங்கினால் அலட்சியம் கொண்டாலே**

**6.** **கொண்டாலே இயற்கை பொய்க்கும்**
**குளறுபடி கண்டு ஆளுமைக்கு**
**உண்டாகும் ஆபத்து சிக்கல்**
**உண்மைபட பெண்மைக்கு பாதுகாப்பு**

**7.** **காப்பு தரும் அரசே ஆளுமையே**
**கந்தவேலன் என் அருளை பெறும்**
**காப்பான மக்கள் சக்தி கூடி**
**கலியுகத்தில் ஞானஆட்சி தர நேரும்**

8. நேருமைபட சமூகம் காக்கின்ற
நிர்வாகம் சட்ட திட்டங்கள்
பெருமைபட வலுப்படுத்தி நன்கு
பெண்மைக்கு இளம் தலைமுறைகட்கு

9. தலைமுறைகட்கு நல்சிந்தைபட
தயவு பெருந்தன்மை உண்மை வாழ்வு
நிலைபட உயர உண்டான ஆளுமை
நடுவணும் மாநிலமும் புரிதல் காண

10. காணவே அநீதியான செயல்கட்கு
கடுமையான தண்டனை தருகவே
தானாக குற்றங்கள் ஒழிந்து
தமிழகம் பரதமும் தன் நிலை உயரும்

11. உயரும் மலரும் நல் சமூக
உயர் அந்தஸ்துபட மக்களிடை
தயவு நிலை தருமநிலை பெருகி
தமிழகம் பரதம் செழுமை காண்கும்

12. காண்கவே இளம் தலைமுறைகட்கு
கல்வி காலமே நல் வழிகாட்டலும்
ஆன்மீக சிந்தை வளர்ச்சியும்
அறிவு முதிர்ச்சியும் பக்குவமும் காண

13. காணவே அவதார சக்தியாக
கண்ணியமுற ஞான வழிகாட்டும்
ஞானதேசிகன் அறம் தயவு நெறியை
நல்கி யாவரும் அடைய வகை செய்ய

14. செய்யவே இளம் தலைமுறைகள்
சேவை நோக்காய் சிறப்பான சக்தியாக
மெய்ஞான உணர்வுபட வளர்ந்து தேறுவர்
முழுமை ஞான சக்தியாக பாதுகாப்பும் பெறுவர் வார ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விளம்பி வருடம் பங்குனி மாதம் 10ம் நாள் 24.3.2019, ஞாயிறு முதல் பங்குனி மாதம் 17ம் நாள் 31.03.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

அற்புதமான பண்பாடுகளை கொண்ட பாரத தேசமே பயபக்தி நிறைந்திட்ட தமிழகமே சண்முகனார் முருகப்பெருமான் எமது சக்தி மிகுந்த சர்வபலம்மிக்க தமிழகத்திலும் விளம்பி வருடம் பங்குனி மாதம் 10ம் நாள் 24.03.2019, ஞாயிறு முதல் பங்குனி மாதம் 17ம் நாள் 31.03.2019 ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

இவ்வுலகம் கலியுகத்தின் கோரமான பிடியினுள் சிக்கி துன்பத்தில் உள்ளதினால் சமூகத்தில் பல துன்பம்மிக்க அவலங்கள் நடந்தேறும், இளமையை தகாத வழிகளிலே

செலுத்தி தகாத வழி சென்று பண்பில்லாத பல அநீதியான செயல்களை செய்து, பெண்களுக்கு இடையூறு செய்தும், துன்பம் விளைவித்தும் பெண்களுக்கு பாதுகாப்பு என்பதே இல்லாத வகையில் இச்சமூகத்தில் இன்னலும் அச்சமும் அதிகமாக இருக்கும்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாட்டினை பாதுகாக்க வேண்டிய ஆட்சியாளர்கள் நாட்டில் நடக்கும் அநீதிகளை அழித்து கட்டுப்படுத்தி மக்களை காக்கும் பதவியாளர்கள் பாரபட்சம் இன்றி, உண்மையுடன் செயல்பட்டு மக்களை காத்திடாமல் ஏனோ தானோ என்று அலட்சியமாய் இருந்திட்டால் நாட்டினில் இயற்கை வளம் பொய்த்திடும். ஆட்சி பொறுப்பில் உள்ளவர்களுக்கு குளறுபடிகள் உண்டாகி ஆட்சிக்கு பாதகமான சூழ்நிலைகள் உண்டாகும், ஆட்சிக்கு ஆபத்தும் சிக்கலும் உண்டாகும்.

பெண்களை மென்மையுடன் பாதுகாக்கும் அரசே ஆளும் ஆட்சியாளர்களே கந்தவேலன் என் அருளைப் பெறும் காப்பான மக்கள் சக்தி பெருகி, இக்கலியுகத்தினில் ஞான ஆட்சி தர நேரிடும். சமூகத்தை காக்கின்ற நேர்மையுடன் நிர்வாகம் நடத்துகின்ற அரசு சட்டதிட்டங்கள் எல்லாவற்றையும் பெருமையுடன் நேர்மையாக நடந்து வலுப்படுத்தி நன்கு பெண்மைக்கு இளம் தலைமுறைக்கு நல்சிந்தைபட தயவும், பெருந்தன்மையும், உண்மையும், வாழ்வும் நிலைப்பட வாழ்வு உயர்ந்திட மத்திய அரசும், மாநில அரசும் நல்லாட்சி புரிந்திட வேண்டும்.

ஆட்சியாளர்கள் அநீதியான செயல்களுக்கு கடுமையான தண்டனைகளை தந்திட குற்றங்களெல்லாம் தானாகவே ஒழிந்து தமிழகமும் பாரததேசமும் தன்னிலை உயரும். சமூகத்திலும் நல்ல மாற்றங்கள் உருவாகி சமுதாயம் நல்சமுதாயமாக உருவாகிடும், மக்கள் உயர்வான அந்தஸ்துள்ள வாழ்வை வாழ்ந்து மக்களிடையே தயவும் தருமநிலையும் பெருகி தமிழகமும் பாரதமும் செழுமை காண்கும்.

அரசு பொறுப்பில் உள்ளோர் இளைய தலைமுறையினரை பாதுகாக்கும் வகையிலே அவர்கள் கல்வி கற்கும் காலத்திலேயே அவர்கட்கு நல்வழிகாட்டலும் ஆன்மீக சிந்தனை வளர்ச்சியும் அறிவு முதிர்ச்சியும் மனப்பக்குவமும் பெற்றிட வழிவகை செய்திட வேண்டும்.

இளைய தலைமுறைகள் அவதார சக்தியாக வந்துதித்துள்ள மகான், கண்ணியமான ஞானவழி காட்டும் ஞானதேசிகனாரின் அறம் தயவு நெறியினை பின்பற்றி வாழ வழிவகை செய்திட வேண்டும். அவ்விதம் இளைய தலைமுறைகள் தர்மத்தின் முறையை தயவு நெறியினை ஏற்று நடந்து உலக சமுதாயத்திற்கு சேவைகள் செய்யும் சிறப்பான சக்தியாக மெய்ஞான உணர்வுடன் வளர்ந்து கடைத்தேறிடுவார்கள். வருங்காலங்களில் முழுமையான ஞானசக்தியாக விளங்கி எமது அருள் பாதுகாப்பையும் பெற்றிடுவார்கள் என தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–